மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம்: அப்படியொரு யோசனை இல்லை.

Next World Tamil Conference.

*183 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to hold the next World Tamil Conference in Tamil Nadu; and

(*b*) if so, the place where it is proposed to be held?

அடுத்த உலகத் தமிழ் மாநாடு

திரு ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அடுத்த உலகத் தமிழ் மாநாட்டை தமிழ் நாட்டில் நடத்துவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், எந்த இடத்தில் அதனை நடத்தக் கருதப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: (அ) அரசு இது குறித்து யோசித்து வருகிறது.

(இ) இடம் நாள் இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.

திரு ஜி. சுவாமிநாதன்: இந்த ஆண்டிலேயே நடத்தலாமா என்பதையாவது அரசு முடிவு செய்திருக்கிறதா? 1978ஆம் ஆண்டிலேயே நடத்தலாம் என்று அரசு முடிவு எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: அதைக் குறித்துத் தான் யோசனை செய்யப்பட்டு வருகிறது.

திரு ஜி. சுவாமிநாதன்: தமிழ் நாட்டினுடைய வரலாறு குறித்து சரியான முறையில் வரலாறு எழுதப்பட வேண்டும் என்று அரசு ஆலோசனை செய்து வருகிறதா? அதைப்பற்றி முடிவு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தனியாகக் கேள்வி கேட்டால், விவரமாகப் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.